1975 அக்டோபர் 28]

stage. It is only in Himachal Pradesh, apple is grown in large quantities. In both the Nilgiris and Kodaikanal, as stated in the written answer, the climate is not cool enough even in winter.

புதிய ரக காரட் பயிரிடல்

** 102 **வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்** : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நீலகிரிப் பகுதியில் "ஜிரேே" என்ற காரட் ரகத்தை பயிரிட உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) & (இ) இந்த காரட் வகைகளின் விதைகள் வருடந்தோறும் இறக்குமதி செய்யப்பட்டு, நீலகிரி மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் தற்போது எவ்வளவு ஏக்கரா பரப்பளவில் இந்த காரட் வளர்க்கப்படுகிறது, ஆண்டொன்றுக்கு உற்பத்தியாவது எவ்வளவு என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : 1973-74 ஆம் ஆண்டுகளில் ஆண்டுதோறும் ஏறத்தாழ 400 ஏக்கராக்களுக்குப் போதிய 500 கிலோ விதைகள் கொடுக்கப்பட்டன. நீலகிரி மாவட்டத்திலேயே இந்த விதைகளை உற்பத்தி செய்ய முடியுமா என்பது இன்னமும் சோதனையில்தான் இருக்கிறது.

சிறு விவசாயிகள் அபிவிருத்தித் திட்டம்

** 103. **வினா—திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மத்திய அரசு உதவியுடன் அமல் நடத்தப்படும் சிறு விவசாயிகள் அபிவிருத்தித் திட்டம் நமது மாநிலத்தில் எங்கெங்கு நடத்தப்படுகின்றது ?

(இ) அதில் மத்திய, மாநில அரசுகளின் பங்கு யாது ?